[2011 ஆகஸ்ட் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோதை பிறந்த ஊர், கோபாலன் வாழும் ஊர் என்று ஏழைகளால் அழைக்கப்படும் ஏழைகளின் திருப்பதி என்று போற்றப்படுகின்ற எனது ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள திருவண்ணாமலை பெருமாள் திருக்கோயிலைச் சுற்றி கிரிவலப் பாதை அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஆணை பிறப்பித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஏனைய இரண்டு வினாக்களும் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### இலங்கைத் தமிழர்களுக்காக நிறைவேற்றப்பெற்ற தீர்மானத்தையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ஷே விமர்சித்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தமிழக சட்டமன்றப் பேரவையில் இலங்கைத் தமிழர்களுக்காக நிறைவேற்றப்பெற்ற தீர்மானத்தையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ஷே விமர்சித்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து தே.மு.தி.க. கட்சியைச் சார்ந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மற்றும் மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா ஆகியோர் சட்டப் பேரவை விதி 55-ன்கீழும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன் ஆகியோர் சட்டப்*

2011 ஆகஸ்ட் 11] [பேரவைத் தலைவர்]
பேரவை விதி 55—ன்கீழும், இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. கு. லிங்கமுத்து ஆகியோர் சட்டப் பேரவை விதி 56—ன்கீழும், புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி சட்டப் பேரவை விதி 55—ன்கீழும் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் சட்டப் பேரவை விதி 55—ன்கீழும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில், தே.மு.தி.க. கட்சியின் சார்பாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் ஜூன் மாதம் 8 ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் இலங்கையிலே நடைபெற்ற இனப் படுகொலை குறித்தும், அந்த நாட்டினுடைய ஆட்சியின் அதிபராக இருக்கக்கூடிய மகிந்த ராஜபக்ஷே போர்க் குற்றவாளியாக உலகக் குற்றவியல் நீதிமன்றத்தின்முன் நிறுத்தப்பட்டுள்ளார் என்பதை உணர்ந்தும், பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்று உலகமே ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு தீர்மானத்தை முன் மொழிந்து அது ஏகமனதாக இந்தப் பேரவையால் நிறைவேற்றப்பட்டது. ஆகவே, அந்தத் தீர்மானம் இந்தப் பேரவையினுடைய சொத்தாகும். இதுகுறித்து இலங்கை அதிபரினுடைய தம்பி கோத்தபய ராஜபக்ஷே, அவர் வெறும் பயல் அல்ல, கோத்த பயல். கோத்தபய ராஜபக்ஷே கருத்து தெரிவித்திருக்கின்றார். அந்தக் கருத்து, சாதாரண முறையில் பேச்சுரிமை என்ற அடிப்படையில் அமைந்திருக்குமேயானால், அதைப்பற்றி நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. ஆனால், இந்தச் சட்டமன்றத்தைப் பற்றியும், குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பற்றியும், தனிப்பட்ட முறையிலே கண்டனம் தெரிவிக்கின்ற வகையில் அந்தக் கருத்து அமைந்திருப்பது இந்தியாவினுடைய அண்டை நாடான இலங்கையோடு இருக்கக்கூடிய good neighbourliness என்று சொல்வார்கள், அருகில் இருக்கின்ற நாடுகளினுடைய நட்புத் தன்மையைப் பாதிக்கின்ற வகையிலேயும் அமைந்திருக்கிறது.

*[திரு. ச. இராமச்சந்திரன்]* [2011 *ஆகஸ்ட் 11 முற்பகல் 11–10*

*அதுமட்டுமல்லாமல், இந்தச் சட்டமன்றம் என்றால் இது ஏதோ ஒரு நகராட்சி மன்றம் என்று பொருள் அல்ல. இந்தச் சட்டமன்றத்திற்கு என்று ஒரு இறையாண்மை உண்டு. இன்னுஞ்சொல்லப்போனால் இலங்கையினுடைய இறையாண்மை 1–3/4 கோடி மக்களைக் கொண்டது. ஆனால், தமிழ்நாட்டினுடைய இறையாண்மை அதைப்போல 5 மடங்கு மக்கள் தொகையைக் கொண்ட 7–1/2 கோடி மக்களைக் கொண்டது. (மேசையைத் தட்டும் ஒலி) நாம் இந்திய அரசியல் அமைப்பில் இணைந்திருக்கின்ற காரணத்தினாலேயே நம்முடைய இறையாண்மை பட்டுப்போய் விடவில்லை.* Sovereignty rests with the people *என்று சொல்லுவார்கள். ஆகையினாலே மக்களைச் சார்ந்ததாகும் இறையாண்மை. ஆகவே, இந்த மன்றத்தாலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறபொழுது, அதற்குரிய பொறுப்புணர்ச்சியோடு குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆனால் அவர் இங்கே குறிப்பிடுகிறார், 'இலங்கை அரசுக்கு எதிராக தமிழகச் சட்டசபையில் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் நிறைவேற்றியுள்ள தீர்மானம் அவரது சொந்த அரசியல் ஆதாயத்திற்குத் தானே தவிர வேறு அல்ல' என்ற வகையிலே கருத்து தெரிவிக்கிறார்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் அரசியல் ஆதாயம் தேட வேண்டிய அவல நிலையில் தமிழ்நாட்டு மக்கள் நம்மை வைக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையிலே அமைந்த கூட்டணியில் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களும், முற்போக்குக் கட்சிகளும் இணைந்து அமைந்த இந்தக் கூட்டணியில், நாங்களே கூட 200 இடங்கள்தான் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால், தமிழ்நாட்டு மக்கள் தாராளமாக 203 இடங்களைத் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மன்றத்தை இங்கே நிறுவியிருக்கின்றார்கள். அரசியல் ஆதாயம் தேட வேண்டிய அவசியம் நிச்சயமாக இந்த அரசுக்கு இல்லை என்பதை வரலாறு உணர்ந்தவர்கள் நன்றாக அறிவார்கள். அப்படியிருந்தும் வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு இந்தச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறபொழுது நாம் அதை வெறுமனே பார்த்துக் கொண்டு இருப்பது எந்த வகையிலும் நியாயம் ஆகாது. அதோடுமட்டுமல்லாமல் அவர் மேலும் குறிப்பிடுகிறார், இந்தச் சட்டமன்றத் தீர்மானத்தை*

நிறைவேற்றியவர்களுக்கு இலங்கையிலே என்ன நடக்கிறது என்று தெரியாமல் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று சொல்கிறார் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து இங்கே இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம் என்றால், நம் அறியாமை காரணமாகவா? பக்கத்து வீட்டில் அவர்கள் அடக்கமாகவும், அமைதியாகவும் இருந்தால் யாரும் கவலைப்படப்போவதில்லை. ஆனால், பக்கத்து வீடே தீப்பற்றி எரிகிறது என்கிறபொழுது, பக்கத்து வீட்டுக்காரன் மட்டுமல்ல; ஊர் முழுவதும் அந்தத் தீயைப் பற்றி தெரிந்தபின் அணைக்கத்தான் செய்வார்கள். அதைப்போல, இலங்கை இன்றைக்குப் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது என்பதை உணராதவர்கள் யாரும் இல்லை. ஆகவே, தெரியாமல் நாம் யாரும் இங்கே இந்தத் தீர்மானத்தைப் போடவில்லை என்பதையும் நான் இங்கே தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், சொல்லுகின்றார், உலக சர்வதேச விசாரணைக்கு அழைப்பு விடுப்பது உபயோகம் இல்லாதது என்று. சர்வதேச விசாரணைக்கு நாம் மட்டும் அழைப்பு விடுக்கவில்லை. இலங்கையிலே நடந்த இனப் படுகொலையைப் பற்றி ஐ.நா. மன்றத்தின் சார்பில் அதனுடைய பொதுச் செயலாளர் தனிக் குழுவை அனுப்பி, அவர்கள் ஆய்வு செய்து, அவர்களே இனப் படுகொலை நடந்திருக்கிறது என்ற விவரத்தைத் தந்திருக்கிறார்கள். இன்றைக்கு இலங்கை அரசு உண்மையான விசாரணையைக் கண்டறிய வேண்டுமென்றும் அதேநேரத்தில் மனித உரிமைப் பாதுகாப்புக் குழுவிலேயும் இந்தப் பிரச்சினை மறு ஆய்வுக்கு விடப்பட வேண்டுமென்றும் கூறியிருக்கிறது. ஐரோப்பிய நாடுகள் தடை விதித்தன. அமெரிக்க நாடு ஏற்கெனவே இலங்கைக்குத் தர வேண்டிய உதவியை தரக்கூடாது என்று அமெரிக்காவிலுள்ள காங்கிரஸ், அதாவது நாடாளுமன்றக் குழுவினர் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றார்கள். இங்கிலாந்து கண்டனம் தெரிவிக்கின்றது. ஆகவே, உலக நாடுகள் அனைத்தும் தெரிவித்த கண்டனத்தை ஒட்டித்தான் நாம் இந்தத் தீர்மானத்தை இந்தச் சட்டமன்றத்திலே நிறைவேற்றினோமே தவிர, வேறு காரணத்தினாலே அல்ல. அதற்கு அவர்கள் உள் நோக்கத்தை இங்கே கற்பிப்பது தேவையற்றது மட்டுமல்ல, இன்னொன்றும் சொல்கின்றார், அந்த மக்களுக்குத் தேவை என்ன என்பதை அவர் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் குறிப்பிட்டு, அந்த மக்களுக்குத் தேவை என்ன என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும், அங்கே இருக்கின்ற மக்கள் எல்லாம்

சமமாக நடத்தப்படுகிறார்கள், அவர்கள் சமமாக இருக்கிறார்கள். அவர்கள் சிங்களவர்களானாலும் சரி, தமிழர்களானாலும் சரி, முஸ்லீம்களானாலும் சரி, எல்லோரும் சமத்துவமும், சம வாய்ப்பும் பெற்றிருக்கிறார்கள் என்கின்ற வகையிலே பேசியிருக்கின்றார்.

ஒன்றை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். ஒற்றுமை என்பது அனைவரும் சேர்ந்து நல்வாழ்வோடு இருப்பது. ஓநாயின் வயிற்றுக்குள்ளே ஆட்டுக் குட்டி இருப்பது ஒற்றுமையாகாது. அதுகூட ஒன்றாக இருப்பதாகத்தான் பொருள். அதைப்போல், இன்றைக்கு அங்கேயுள்ள தமிழ் மக்களையெல்லாம் கொன்று குவித்துவிட்டு நாங்கள் ஒன்றாக இருக்கின்றோம் என்று சொல்வது உலகை ஏமாற்றுகின்ற ஒரு காரியம் ஆகும்.

முற்பகல் 11–15

அதோடு மட்டுமல்ல, இன்னும் சொல்லப்போனால் இன்றைக்கு அங்கே இருக்கின்ற மக்கள் இன்று நேற்றல்ல, என்றைக்கு இலங்கை சுதந்திரம் பெற்றதோ 1948 ஆம் ஆண்டிலேயிருந்தே அவர்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆட்சி மொழி சிங்களம் தான், தமிழ் அல்ல. ஆகவே, நீங்கள் வேறு. அரச மதம், புத்த மதம் தான். மற்ற மதங்களுக்கு இங்கு இடமில்லை, நீங்கள் வேறு. தொழிற்கல்விப் படிப்பா? மருத்துவக் கல்விப் படிப்பா? சிங்களவர்களானால் குறைந்த மார்க்குகள் வாங்கினால் போதும். மற்றவர்கள் என்றால் அதிக மார்க்குகள் வாங்கித்தான் ஆக வேண்டும். இப்படி வேறுபடுத்திப் பார்த்தது யார்? அங்கேயிருக்கின்ற அரசுதான். அங்கே அமைதியான முறையில் அறப்போராட்ட வழியில் தங்களுக்குரிய நியாயங்களைப் பெற வேண்டும் என்பதற்காக தமிழர் தந்தை செல்வா அவர்கள், ஒரு கூட்டாட்சி இருந்தால் போதும், தமிழ் மக்கள் வாழும் பகுதிக்கு ஒரு மாநிலம் இருந்தால் போதும் என்று அறப்போராட்டத்தில் ஈடுபட்டார்கள். ஆனால் நாகரிகமுள்ள வெள்ளைக்காரனை எதிர்த்ததினாலே மகாத்மா காந்தியடிகளுடைய அறப்போராட்டம் வெற்றி பெற்றது. ஆனால், காட்டுமிராண்டிகளினுடைய ஆட்சி நடக்கின்ற சிங்களத்திலே எதிர்த்ததினாலே அவர்கள் வெற்றி பெறவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும்கூட நான் தெளிவாகச் சொல்கிறேன். தனி ஈழக் கோரிக்கை விடுதலைப் புலிகள் இயக்கத்தாலே வந்ததல்ல. 1972 ஆம் ஆண்டு அவர்கள் கேட்டுக் கேட்டுப் பார்த்து, ஒரு

2011 ஆகஸ்ட் 11] [திரு. ச. இராமச்சந்திரன்]

மாநிலம் வேண்டுமென்று கேட்டுக் கேட்டுப் பார்த்து கிடைக்காத காரணத்தினாலே அனைத்துத் தமிழ் மக்களின் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து ஓர் அமைப்பை ஏற்படுத்தி, அதற்குப் பிறகுதான் எங்களுக்கு வேறு வழியில்லை, தனி ஈழம் வேண்டும் என்று வட்டுக்கோட்டை தீர்மானம் என்று 1972 ஆம் ஆண்டு கேட்டார்கள். 1983 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் விடுதலைப் புலிகள் இயக்கம் போன்ற இளைஞர்களுடைய தீவிரவாத இயக்கம் வந்தது. ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், அங்கே நடக்கிற பிரச்சினைகளைப் பற்றி நமக்குத் தெரியாது. அங்கேயிருக்கின்ற நிலைமைகளைப் பற்றி இங்கு இருக்கின்ற அரசுக்குத் தெரியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாது என்று சொல்கின்ற துணிவு இன்றைக்கு அந்த அரசுக்கு எப்படி ஏற்பட்டிருக்கிறது? கோத்தபய ராஜபக்ஷே என்கின்றவர் சாதாரணமானவர் அல்ல. அவர் ஜனாதிபதியினுடைய தம்பி. அவர்தான் அங்கே பாதுகாப்புத் துறை அமைச்சர். இராணுவத் துறை அமைச்சர். அவர்தான் இந்த இனப் படுகொலைக்கு முக்கியக் காரணம். மகேந்திர ராஜபக்ஷே துரியோதனன் என்றால், இந்த கோத்தபய ராஜபக்ஷே துச்சாதனன். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டுக்கும் ஒன்றும் வேறுபாடு இல்லை. அதனாலே இவர் போர் நெறிமுறைகளையெல்லாம் மீறி அங்கே இனப் படுகொலையை நடத்திய காரணத்தினாலே அங்கே இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா அவர்களே இந்த முறை சரியல்ல என்ற காரணத்தினாலே அவர் அங்கே வெளியேற்றப்பட்டார். அவர் இன்றைக்கு சிறையிலே வாடிக் கொண்டிருக்கிறார். ஏன் இதையெல்லாம் குறிப்பிடுகிறேன் என்றால், இந்த அளவுக்கு இன்றைக்கு இலங்கை அரசுக்குத் தைரியம் வருவதற்கு என்ன காரணம் என்றால், நான் மிக வருத்தத்தோடுத் தெரிவித்துக்கொள்கிறேன், இந்திய அரசு கடந்த காலத்திலே கடைப்பிடித்த போக்குதான் அதற்குக் காரணம்.

இன்றையதினம் Economics Times என்ற ஆங்கில நாளேட்டிலே நம்முடைய நாட்டைச் சேர்ந்த ஜெனரல் அசோக் மேத்தா என்பவர் குறிப்பிடுகிறார். அவர் பொதுவாக இதைப் பற்றியெல்லாம் குறிப்பிடுகிறபோது, என்ன சொல்கிறார் தெரியுமா? What surprise Srilanka was India's strategic co-operation in the destruction there. அதாவது என்ன ஆச்சரியம் என்றால், இந்த இன அழிவு நடந்தபோது இந்தியாவும் அதற்கு ஒத்துழைப்புக் கொடுத்ததுதான். அதோடு மட்டுமல்ல, Recently one Srilankan Minister said that Srilanka did not think India will allow the war to continue after the fall of Kilinochchi.

*[திரு. ச. இராமச்சந்திரன்]* [2011 ஆகஸ்ட் *11*

*கிளிநொச்சி வீழ்ந்த பிறகு எப்படியும் போர் நிறுத்தம் ஏற்படும் என்று நாம் மட்டுமல்ல; இந்தியா மட்டுமல்ல; இலங்கையிலுள்ள அமைச்சர் அவையில் உள்ள மந்திரிகளே எதிர்பார்த்தார்கள். ஏனென்றால் எப்படியும் இந்தியா அதைத் தடுத்து நிறுத்திவிடும், மிகப் பெரிய பேரழிவு ஏற்பட அனுமதிக்கமாட்டார்கள் என்று.* Recently one Srilankan Minister said that Srilanka did not think India will allow the war to continue after the fall of Kilinochchi. Western pressures were used to end the war.

*மேலை நாடுகளெல்லாம் போர் நிறுத்தத்தை வற்புறுத்தின. இருப்பினும் இந்தியாவும் துணை போயிற்று. இந்தியாவுக்கு அன்றையதினம் இங்கே தமிழினத் தலைவராக இருந்து ஆட்சி செய்தாரே, முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவரும் துணை போனார். (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய விளைவுதான் இன்றைக்கு இவ்வளவு பெரிய இனப் படுகொலை, வரலாற்றிலே இல்லாத மனிதப் படுகொலை ஏற்பட்டிருக்கிறது. இந்தியா தன்னை ஒன்றும் செய்யாது என்கின்ற தைரியத்தினாலேதான், இன்றையதினம் இந்த அளவுக்கு இலங்கையிலே இருக்கின்ற ஒரு சாதாரண அமைச்சர், ஒன்றே முக்கால் கோடி, மக்கள் தொகை கொண்ட ஒரு நாட்டினுடைய அமைச்சர், ஏழரைக் கோடி மக்கள் தொகை கொண்ட தமிழ்நாட்டில், நம்முடைய சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை, ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைக் குறை சொல்லியிருக்கிறார்.*

*முற்பகல் 11–20*

*இன்னும் என்ன வேதனை என்றால், இந்த இலங்கைப் பிரச்சினை பற்றி நாடாளுமன்றத்திலே விவாதம் வேண்டும் என்று கேட்கின்றபொழுது அதற்கான* agenda—*நிகழ்ச்சி நிரல் தயாரிக்கின்றபொழுது முதலிலே நாடாளுமன்ற* agenda—*வில் என்ன இருந்தது என்றால் போர்க் குற்றவாளியான மகிந்த ராஜபக்ஷே பற்றி விசாரிக்க வேண்டும் என்கின்ற அந்தத் தீர்மானத்தை அவசர, அவசரமாக இந்திய அரசு திருத்தி, அந்த நிகழ்ச்சி நிரல் அறிக்கையை மாற்றியிருக்கின்றார்கள், இன்றைய செய்தியிலே வந்திருக்கிறது. முதலில் வழங்கப்பட்ட நிகழ்ச்சி நிரல் அறிக்கையில் இலங்கைத் தமிழர்களை இராணுவம் கொன்றது குறித்து ஐ.நா. அறிக்கை வெளியிட்டுள்ளது தொடர்பாக விவாதிக்கப்படும் என்பதாக உள்ளது. அதைத் திருத்தி, போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் நிவாரணத்திற்கு இந்திய அரசு வழங்கிய நிவாரணம் குறித்து*

2011 ஆகஸ்ட் 11] [திரு. ச. இராமச்சந்திரன்]

விவாதிப்போம். போர்க் குற்றம் என்பது எங்கே, அது மனிதப் படுகொலை. Human Rights Violation—உலகமே இன்றைக்கு ஐ.நா. சபையிலே Right to Protect என்கின்ற விவாதம், ஒரு நாடு இறையாண்மை இருக்கின்றது என்று சொல்லி தன் நாட்டு மக்களைக் கொன்று குவிப்பதற்கு அதிகாரம் கிடையாது. உலக நாடுகள் தலையிட்டு அந்த அரசாங்கத்திடமிருந்து அந்த மக்களைக் காப்பாற்றுகின்ற Right to Protect இன்றைக்கு ஐ.நா. சபையிலே விவாதிக்கப்பட்டு வருகிறது. அப்படி இருக்கிறபொழுது இன்றைக்கு நாடாளுமன்றத்திலே agenda—வைத் திருத்துகின்ற அளவுக்கு இந்திய அரசு இருக்கிறது என்றால், தமிழ்நாடு அரசு குறை கூறுகின்ற தைரியத்திற்கு முழுப் பொறுப்பு இந்திய அரசுதான் என்பதை எடுத்துக்காட்டி (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்கள் அதை இனியும் நம்புவதில் அர்த்தம் இல்லை என்று கூறி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஒரு மனதாக நாம் நிறைவேற்றிய தீர்மானத்தை இழித்தும், பழித்தும் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் Head Lines Today என்கிற Media–வுக்குக் கொடுத்த பேட்டியில் சொல்லியிருப்பதன் விளைவாக கடுமையான ஆத்திரமூட்டும் செயலில் அவர் ஈடுபட்டிருக்கிறார். இலங்கையில் அதிகாரப் பகிர்வு விரைவில் நடைபெறும் என்று அறிவித்தவர் மகிந்த ராஜபக்ஷே. போர் முடிந்து விட்டது, சில மாதங்களுக்குள்ளாக அதிகாரப் பகிர்வு என்கிற அரசியல் தீர்வு தொடங்கும் என்று அறிவித்தவர் அவர்தான். ஆனால், தொடர்ச்சியாக அவர், அவருடைய வாக்குறுதியை மீறி வந்தார் என்பது மட்டுமல்ல, தமிழ் மக்களுக்குக் கொடுமையை அதிகரித்தார்கள்; தீவிரப்படுத்தினார்கள். அங்கு ஏற்பட்டிருக்கிற சொல்லொணாத் துயர் காரணமாக மனித உரிமை மீறலை நாம் சகிக்க முடியாது என்கிற நிலையிலே நாம் ஒரு தீர்மானத்தை இங்கே நிறைவேற்றினோம். இலங்கையில் இருப்பது, நடப்பது என்னவென்று தெரியாது என்று சொல்லுகிற அவர், இலங்கையின் முன்னாள் அதிபர் சந்திரிகா குமாரதுங்கே இலங்கையில் இவ்வளவு பெரிய கொடுமைகள், இவ்வளவு பெரிய நிகழ்வுகள், இவ்வளவு பெரிய

அழிவுகள், பொருளாதாரச் சீரழிவுகள், இலங்கையில் எல்லா வகையிலும் இன்றைக்குப் பின்தங்கி இருப்பதற்குக் காரணமான இந்த உள் நாட்டுப் போர் நம்முடைய செயல் காரணமாகத்தான் நடந்தது. என்னுடைய தந்தை தவறிழைத்தார், என்னுடைய தாய் தவறிழைத்தார், நானும் தவறிழைத்தேன். இலங்கைத் தமிழ் மக்களுக்கு அதிக அதிகாரம் வழங்கியிருக்க வேண்டுமென்று அங்கிருக்கிற முன்னாள் அதிபர் பேசிய பேச்சும் இப்போதுதான் வந்தது. ஆகவே, இலங்கையைப் பற்றி நமக்குத் தெரியாமல் இருக்கட்டும். இலங்கையைப் பற்றி தெரிந்த, ஆண்ட, தந்தை ஆண்டு, தாய் ஆண்டு, தானும் ஆண்ட சந்திரிகா குமாரதுங்கே அவர்கள், நாம் தமிழர்கள் விஷயத்தில், தவறிழைத்துவிட்டோம் என்று பேசினார்கள். அப்படி நிலைமைகள் நம் முன்னால் விரிந்து கிடக்க, விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்தவர் இப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் என்பவர் கடந்த வாரம் தமிழகத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி நடத்திய இலங்கைத் தமிழ் மக்களின் சம உரிமை மாநாட்டிற்கு வந்திருந்தார். அவர் பேசுகிறபொழுது கடந்த ஆண்டிலே 10 முறை அரசாங்கத்தோடு எங்களுடைய நாடாளுமன்றக் குழு பேச்சுவார்த்தை நடத்திவிட்டது. பேச்சுவார்த்தையில் நாங்கள் ஒன்றும் தனி நாடு கேட்கவில்லை. பேச்சுவார்த்தையில் சம உரிமை, அதிகாரப் பகிர்வுதான் கேட்கிறோம். இதைக்கூட அவர்கள் பரிசீலிக்க மறுத்தால் என்ன செய்வது என்கிற கேள்வியை அந்த மாநாட்டிலே எழுப்பினார்கள். இவ்வளவு நியாயமாக ஒரு அரசியல் தீர்வு வேண்டும் என்கிற அடிப்படையில் அங்கு இருக்கிற அத்தனை மக்களும், அத்தனை குழுக்களும் ஒன்றாகச் சேர்ந்து பேசுகிறபொழுதுகூட, அதைப் புறக்கணிக்கிற அளவுக்கு தவறிழைத்துக் கொண்டிருக்கிற அந்த ஆட்சி, மேலும், மேலும் கடுமையான ஒரு நிலை அங்கே உருவாவதற்கான சூழ்நிலையை அவர்கள்தான் அங்கே உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆக, எல்லாவற்றுக்கும் மேலாக அதிகாரப் பகிர்வு வேண்டும் என்பது இப்பொழுது தமிழ் மக்களுக்குத் தேவையில்லை என்கிற கருத்தையும் கோத்தபய ராஜபக்ஷே சொல்லியிருக்கிறார். ஆகவே, இந்தியாவிலேயிருந்து நம்முடைய சிவசங்கர மேனன் போகிறார், நிருபமா ராவ் ஏற்கெனவே போனார்கள், போய் அவரிடம் பேசி வந்துவிட்டுச் சொல்லுவார்கள், அரசியல் தீர்வுக்கும் அதிகாரப் பகிர்வுக்கும் ஏற்பாடு நடக்கும் என்று எத்தனையோ முறை அவர்கள் அறிவித்துவிட்டார்கள்.

இந்திய அரசு நம்மையும் ஏமாற்றி, உலகத்தையும் ஏமாற்றி, எல்லோரையும் ஏமாற்றி, தொடர்ந்து ஏமாற்றிக்கொண்டிருக்கிறது. நம்முடைய இந்திய அரசு திரும்பத் திரும்ப வெளியுறவுச் செயலகத்தின் மூலமாக, அந்த அதிகாரிகள் மூலமாக அறிவித்துக்கொண்டிருந்த அந்த வாக்குறுதிகளெல்லாம் என்னவாயின? ஆகவே, இந்தத் தீர்மானத்தில் நாம் மத்திய அரசாங்கத்தைத்தான் வேண்டினோம். இந்தத் தீர்மானத்தில் நாம் நியாயம் வேண்டினோம்; விசாரணை வேண்டினோம்; யுத்தக் குற்றவாளிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டோம். சர்வதேச சமூகத்தினுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு மத்திய அரசாங்கம் உதவ வேண்டுமென்று கேட்டோம். இதிலே என்ன குற்றமிருக்கிறது? இதை இழித்தும், பழித்தும் பேசுகிற அந்த அண்டை நாட்டு அமைச்சர்மீது, அந்த அண்டை நாட்டின்மீது, மத்திய அரசாங்கம் உடனடியாக நம்முடைய வெளியுறவுச் செயலகத்தின் மூலமாக அவர்களைக் கண்டிக்க வேண்டும்; நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்லிய எல்லாக் கருத்துகளையும் நான் வழிமொழிந்து, மத்திய அரசாங்கம் இதிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் உங்களுடைய கவனத்தை ஈர்த்து அமைகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 9 ஆம் தேதி ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானத்தை நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இதே அவையில் முன்மொழிந்து நாம் அனைவரும் ஒருமனதாக ஏற்று, அதை நிறைவேற்றியிருக்கிறோம். அந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற உணர்வோடு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் பாரதப் பிரதமரைச் சந்தித்து, அந்தத் தீர்மானத்தினுடைய அவசியத்தை, கருத்துகளை விளக்கியிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் இப்பொழுது எழுந்திருக்கிற பிரச்சினைகளைத்தான் இன்றைக்கு நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். 2 தினங்களுக்கு முன்னால் 'Headlines Today' என்ற தொலைக்காட்சியில், கோத்தபய ராஜபக்ஷே அந்த நாட்டினுடைய பாதுகாப்புச் செயலாளராக இருக்கக்கூடியவர்,

[திரு. சு. குணசேகரன்] [2011 ஆகஸ்ட் 11

தமிழகத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப்பற்றிப் பேசுகிற நேரத்தில், 3 விதமான கருத்துகளை அதிலே சொல்லியிருக்கிறார். ஒன்று, அரசியல் ஆதாயத்திற்காக, உள்நோக்கத்தோடு இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இரண்டு, தமிழக அரசு, இந்திய அரசு தமிழக மீனவர்களை அடக்கி வைத்துக்கொள்ள வேண்டும். இந்த இரண்டு விஷயங்களுக்கும் இணைப்பாக நாங்கள் நடத்திய இராணுவத் தாக்குதல், நடந்த சம்பவங்கள் கடந்தகாலத்தில் இந்திய அரசுக்குத் தெரியும் என்பதையும் அதிலே வெளிப்படுத்தியிருக்கிறார். இப்படிப்பட்ட நிலையில்தான் இன்றைக்கு எனக்கு முன்னால் உரையாற்றிய நமது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன கருத்து ஒரு மிகப் பொருத்தமான கருத்து. காலத்தின் அருமை கருதி அதற்குள் நான் செல்ல விரும்பவில்லை. அந்தக் கருத்தை நான் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் அப்படியே வழிமொழிகிறேன்.

அதேநேரத்தில் இன்றைக்குத் தமிழக மீனவர்களை அடக்கி வைத்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்தையும் சொன்னதற்குப் பின்னால், இந்தச் சம்பவங்களுக்குப் பின்னால்தான், இலங்கையிலே ஈழ மக்கள் வசிக்கக்கூடிய பகுதிகளிலே உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றிருக்கிறது. அந்த உள்ளாட்சித் தேர்தலில் ராஜபக்ஷேவினுடைய இராணுவ பலம், சூழ்ச்சிகளையெல்லாம் முறியடித்து, தமிழர்கள் ஒன்றுபட்டு, தமிழர் கூட்டமைப்புக்கு ஒரு மிகப் பெரிய வெற்றியைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வெற்றிக்குப் பின்னால்தான் முன்னாள் அதிபராக இருந்த சந்திரிகா குமாரதுங்கே அவர்கள் சிறப்பான கருத்துகளை வெளியிட்டு, கடந்த காலத்திலிருந்து எப்படியெல்லாம் தமிழ் மக்கள் பழிக்கப்பட்டிருக்கிறார்கள், இழிவுபடுத்தப்பட்டிருக்கிறார்கள், அவர்களுடைய உரிமைகள் எப்படி பறிக்கப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் எடுத்துச்சொல்லி, தவறு நம் பக்கம் இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார். அதற்கு அர்த்தம், ஒரு பழமொழி சொல்வதைப்போல, 'நான் எடுக்க வேண்டிய ஆயுதத்தை எதிரி தீர்மானிக்கிறான்', என்பதைப்போல அங்கே இருக்கிற பெரும்பான்மையான மக்களால் ஏற்படுத்தப்பட்ட அந்த சிங்கள அரசு, தொடர்ந்து தமிழர் விரோதக் கொள்கையை எடுத்த காரணத்தால்தான் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவானது. இந்த நிலையில்தான் இன்றைக்கு மீண்டும் இலங்கை அரசு அங்கே யுத்தம் நின்றதற்குப் பின்னால் தமிழர்களுக்கான உரிமைகளை வழங்குவதற்குப் பதிலாக, ஓர் அரசியல் தீர்வை ஏற்படுத்துவதற்குப்

பதிலாக, தமிழர்கள் வாழக்கூடிய பகுதிகளிலே குடியேற்றத்தைச் செய்வதும், இராணுவ முகாம்களை அமைப்பதும், தமிழர்களுக்கான எந்தவிதமான அரசியல் உரிமையை நிலைநாட்டுவதற்கான எந்த முயற்சியும் எடுக்காமல், தன்னிச்சையாக தமிழர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அறிவித்திருக்கிறார்கள். இந்த நிலையில் இப்போது கோத்தபய ராஜபக்ஷேவினுடைய இந்தத் தொலைக்காட்சிப் பேட்டி என்பது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, மேலும் பிரச்சினைகளை மீண்டும், மீண்டும் கிளறுவதாக அமைந்திருக்கிறது. எனவேதான், இந்த நேரத்தில் இந்திய அரசு ஒரு சரியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலில், பக்கத்தில் இருக்கக்கூடிய கோத்தபய ராஜபக்ஷே நமது தீர்மானத்தை விமர்ச்சிக்கிறாரா, இல்லையா என்பது ஒரு பக்கம் இருந்தாலும், 7½ கோடி தமிழ் மக்களுடைய உணர்வுகளோடு இங்கே நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறதா இல்லையா என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

முற்பகல் 11–30

இன்றைக்கு, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, ஒரு agenda–வையே மாற்றியிருக்கிறார்கள். விமர்சித்துப் பேசக்கூடிய அளவிற்கு, இந்திய அரசினுடைய நடவடிக்கை அமையுமானால், அது எதிர்காலத்தில் தமிழ்நாட்டினுடைய பாதுகாப்புக்கும், தமிழர்களுடைய நலனுக்கும் உகந்ததாக இருக்குமா என்ற சந்தேகம் மேலும், மேலும் எழுந்து கொண்டிருக்கிறது. எனவேதான், இந்திய அரசு நமது தீர்மானத்தை ஏற்று, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நிறைவேற்றிய பொருளாதாரத் தடை உட்பட அத்தனை கோரிக்கைகளையும் ஏற்று நடத்துவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

அதோடு, இன்றைக்கு, தமிழக மீனவர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தமிழர்களை நாம் அடக்கி வைத்துக்கொள்வது அல்ல, இன்றைக்கு கச்சத் தீவு ஒப்பந்தத்தை இரத்து செய்கிற ஒரு நடவடிக்கையையும் எடுக்க வேண்டும். நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொடர்ந்து அதற்கான வழக்குகளையெல்லாம் போட்டு செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்,

நாம் இன்னும் ஒரு தீர்மானத்தை இங்கே, இந்தச் சபையிலே நிறைவேற்றி, கச்சத் தீவு ஒப்பந்தத்தை இரத்து செய்யவேண்டுமென்ற தீர்மானத்தை நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முன்மொழியவேண்டும். அதையும் ஒருமனதாக ஏற்று, மத்திய அரசு அந்த ஒப்பந்தத்தை இரத்து செய்து, தமிழக மீனவர்களுக்குப் பாதுகாப்பையும் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, தமிழ்நாடு சட்டமன்றத்தில் நாம் நிறைவேற்றிய அந்தத் தீர்மானம், தமிழக மக்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துகிற வகையிலும், தமிழக மக்களை ஒன்றுபடுத்துகிற விதத்திலும், அதற்கான ஒரு நடவடிக்கையை நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எடுக்க வேண்டும். கடந்த காலத்தைப்போல இல்லாமல், பதவிக்காக அல்லது ஆட்சி உரிமைக்காக கொள்கைகளை விட்டுக்கொடுக்காதவராக இன்றைக்கு நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய கடந்தகால அரசியல் என்பது ஒரு அதிரடி அரசியல் என்று பலபேரால் விமர்சிக்கப்பட்டாலும், அந்த அதிரடி அரசியலில் ஒரு கொள்கை நிலை இருந்தது. கொள்கைக்காக, நியாயத்திற்காகப் பல முடிவுகளை, விளைவுகளை எதிர்பார்க்காமல் அவர் எடுத்திருக்கிறார். அந்த அடிப்படையில், இன்றைக்கு ஈழத் தமிழர்களுடைய நலனைப் பாதுகாப்பதற்காக, இலங்கையிலே தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, தமிழ்நாடு சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், தமிழக மீனவர்களுடைய நலனை மீண்டும் பாதுகாப்பதற்கும், கச்சத் தீவு ஒப்பந்தத்தை இரத்து செய்வதற்காகவும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அவர்களுடைய தலைமையிலே தமிழர்களை ஒன்றுபடுத்தி, தமிழ் அமைப்புக்களை ஒன்றுபடுத்தி, ஒரு வலுவான மக்கள் இயக்கத்தை நடத்திட வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புதிய தமிழகம் கட்சியின் சார்பில், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர். க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வதேச விதிமுறைகளுக்கு மாறாக, அப்பாவி ஈழத் தமிழ் மக்களைக் கொன்று குவித்த இலங்கை அரசுமீது, பொருளாதாரத் தடை விதிக்க வலியுறுத்தி, கடந்த ஜூன் 9 ஆம்

தேதி அன்று தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற முன்மொழிந்த 10 கோடி உலகத் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவு பெற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்மீது (மேசையைத் தட்டும் ஒலி) இலங்கை அதிபர் ராஜபக்ஷே அவர்களின் சகோதரர் கோத்தபய ராஜபக்ஷே அண்மையில் ஆங்கிலத் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கொடுத்த தரமற்ற விமர்சனம் குறித்து முதற்கண் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக கடும் கண்டனத்தை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஏறக்குறைய 50 ஆண்டு காலத்திற்கு மேலாக, ஈழத் தமிழ் மக்கள் தம்முடைய சுயநிர்ணய உரிமைகளுக்காகவும், பாதுகாப்புக்காகவும் போராடி வந்தார்கள். 1972 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினுடைய அடிப்படையில்தான், தமிழ் ஈழம் கோரி தமிழ் இளைஞர்கள் போராடினார்கள். 50 ஆண்டு காலத்திற்குப் பிறகும் அவர்களுக்குத் தீர்வு வரவில்லை. 2009–2010 ஆம் ஆண்டுகளில் ஈழத் தமிழ் மக்கள்மீது நடத்திய கடைசி நேரத் தாக்குதலில், ஒருசில தினங்களில் மட்டுமே கொத்துக் குண்டுகளால் 40,000-க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் படுகொலைக்கு ஆளானார்கள். 3 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் முள்வேலி முகாம்களிலே முடக்கப்பட்டார்கள். இத்தனை அவலங்களுக்குப் பிறகும், தமிழ் மக்களுக்கு எந்தவிதமான தீர்வும் வராத நிலையில்தான், எந்தவிதமான அரசியல் இலாப நோக்கமும் இல்லாமல், இன்னும் சொல்லப்போனால், 2011 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலேகூட இதை ஒரு தேர்தல் வாக்குறுதியாக வைக்கவில்லை. இந்த மாமன்றத்திலே யாரும் எதிர்பார்க்காத வேளையில்தான், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தார்கள். தமிழகத்திலே வாழ்கின்ற 7 கோடி தமிழ் மக்கள் மட்டுமல்ல, உலகெங்கும் வாழக்கூடிய 10 கோடி தமிழ் மக்களும் அந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு அளித்தார்கள்.

முற்பகல் 11–35

ஆனால், அந்தத் தீர்மானத்தைத் தரமற்ற முறையிலே விமர்சித்தும், தமிழ் மக்களைக் காயப்படுத்தக்கூடிய வகையிலேயும் அவர் கொடுத்திருக்கக்கூடிய விமர்சனம் கண்டனத்துக்குரியது. எனவே, கோத்தபய ராஜபக்ஷேவினுடைய பேட்டியைக் கண்டிக்கக்கூடிய வகையிலே இந்த அவையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2011 ஆகஸ்ட் 11

அதுமட்டுமல்ல, அதற்கு முன்னோடியாக, இந்தளவிற்குக் கடுமையாக நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், தமிழ் மக்களையும் காயப்படுத்தி ஆங்கிலத் தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்திருக்கக்கூடிய இலங்கை அரசினுடைய துணைத் தூதரகம் இனிமேல் சென்னையிலே இயங்கக்கூடாது; அதற்குண்டான நடவடிக்கையும் எடுக்கவேண்டும்.

அதுமட்டுமல்ல, கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் 400—க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் படுகொலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆனால், ஒரு வழக்குகூட பதிவு செய்யப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, 400 மீனவர்களின் படுகொலைக்குக் காரணமான இலங்கை அரசின் மீது கொலை வழக்குகள் பதிவு செய்வதற்குண்டான சட்டப்பூர்மான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அது ஒன்றுதான் இலங்கை அதிபர்கள் எப்பொழுதெல்லாம் பதவிக்கு வந்தாலும் அவர்கள் தமிழ் மக்கள்மீது, தமிழக அரசுமீது, தமிழக அரசியல்வாதிகள்மீது கடுஞ்சொற்களால் விமர்சனம் செய்யக்கூடிய நிலைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வரும். ஒரு பேட்டியிலே அவர் சொல்லியிருக்கிறார், Talking to Headlines Today, exclusively in Columbo Rajapaksha said: "This resolution in the Assembly and statements by the Hon. Madam J Jayalalithaa must be for her to gain political advantage". எந்தவிதமான அரசியல் உள்நோக்கம் இல்லாத ஒரு தீர்மானத்திற்கு அவர் அரசியல் உள்நோக்கம் கொண்டது என்று சொல்கிறார். "It is not reasonable because in Srilanka regardless of being Singala, Tamil or Muslims we are Sri Lankans; We are more worried about our citizens than anyone else என்று சொல்லிவிட்டு, ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்கிறார், "If she is so concerned about the welfare of the Tamil people of Srilanka, the first thing you know, what she must do, they must stop Indian fishermen coming to Srilankan waters and fishing in areas predominantly dominated by the Tamil fishermen of Srilanka". அதாவது, "ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுததது" என்று சொல்வார்கள். அதுபோல்தான், அவருடைய வாதம் இருக்கிறது. ஏதோ தமிழ்நாட்டிலேயிருந்து செல்லக்கூடிய மீனவர்கள், இலங்கையிலுள்ள தமிழ் மீனவர்களின் வாழ்க்கை பாதிக்கப்படக்கூடிய அளவுக்குச் செயல்படுகிறார்கள், அதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இவர் நமக்கு அறிவுரை சொல்வதைப்போல சொல்கிறார். எனவே, ஒட்டுமொத்தத்தில் அவருடைய கருத்து, Headlines Today-வில் கொடுத்துள்ள கருத்து, மிகவும் கண்டிக்கத்தக்கது. எனவே, இந்த அவையிலே ஒரு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றிட வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன், வணக்கம்.

2011 ஆகஸ்ட் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே இலங்கை அரசின் பேரிலே, பொருளாதாரத் தடையை வலியுறுத்த வேண்டுமென்றும், இலங்கைத் தமிழ் மண்ணில் நம்முடைய தொப்புள்கொடி உறவுகளான, இலட்சோபலட்ச தமிழ் மக்களைக் கொன்று குவித்த அதிபர் ராஜபக்ஷேவை போர்க் குற்றவாளி என்று அறிவிக்க வேண்டுமென்றும், மாண்புமிகு தமிழக முதல்வர், 10 கோடி தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் இயற்றப்பட்ட இந்தத் தீர்மானத்தை (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய இறையாண்மையை, இந்தியக் கூட்டாட்சித் தத்துவத்தை கொச்சைப்படுத்துகிற வகையிலே, ஏகடியமாய், ஏளனப்படுத்தி, கிண்டல் செய்து, அதிபர் ராஜபக்ஷேவினுடைய இளவல், இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ஷே* Headlines Today *என்கிற ஒரு தொலைக்காட்சிக்கு அதுவும் சென்னைவாழ் நிருபருக்கு இத்தகைய பேட்டியளித்திருப்பது என்பது தமிழக மக்களின் உணர்வுகளைக் கொச்சைப்படுத்துவதாக அமைந்திருக்கிறது. சர்வதேசப் போர்க் குற்றவாளி என்று ஏன் ராஜபக்ஷேவை அறிவிக்க வேண்டும் என்று நம்முடைய தமிழகச் சட்டமன்றத்திலே ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம் என்றால், சர்வதேசப் போர் இலக்கணங்களுக்கு மாறாகக் கொன்று குவித்தது மட்டுமல்ல, கொலை செய்தது மட்டுமல்ல, கற்பழிப்புச் செய்தது மட்டுமல்ல, அவர்களை மனிதத்தனத்திற்கே அப்பாற்பட்டு மிருகத்தனமாய் நடத்தியது மட்டுமல்ல, ஒரு போர் என்றால் அந்தப் போரிலே சரணடைந்தவர்களை எந்த வகையிலும் கௌரவக்குறைவாக நடத்தக்கூடாது என்பதுதான் சர்வதேசப் போர் இலக்கணம். இதைத்தான் நம்முடைய இதிகாசங்களும் வலியுறுத்துகின்றன. நம்முடைய இதிகாசங்களிலேயே போரிலே ஒருவன் சரணடைந்துவிட்டால், சரணடைந்தவனைப் பாதுகாப்பது என்பதும், கௌரவமாக நடத்துவது என்பதும் ஒரு போர் மரபாக இருந்திருக்கிறது. ஆனால், அந்த மரபை மீறி சரணடைந்தவர்களைக்கூட கொலை செய்த, கொடுமையைச் செய்த போர்க் குற்றவாளி. அதுதான் அவரைப் போர்க் குற்றவாளி என்று நாம் பிரகடனப்படுத்துவதற்கே அடிப்படைக் காரணம். சரணடைந்தவர்களைக்கூட போர் மரபுகளுக்கு மாறாக, சர்வதேச நிபந்தனைகளுக்கு மாறாக, கொலை செய்த கொலைக் குற்றவாளி,*

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2011 ஆகஸ்ட் 11
போர்க் குற்றவாளி, பிரகடனப்படுத்தப்பட்ட போர்க் குற்றவாளி இன்றைக்கு ராஜபக்ஷேதான். அப்படிப்பட்ட போர்க் குற்றவாளியை, ஐ.நா. மன்றம் அங்கீகரித்த போர்க் குற்றவாளியை, பிரிட்டிஷ் பாராளுமன்றம் அங்கீகரித்த போர்க் குற்றவாளியை, உலக நாடுகள் பலவும் அங்கீகரித்த போர்க் குற்றவாளியை அன்றைக்கு அமெரிக்காவும், அதன் அடிப்படையிலே நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய கோரிக்கைக்கு இணங்கி, பொருளாதாரத் தடையை விதித்திருக்கிற போர்க் குற்றவாளியை (மேசையைத் தட்டும் ஒலி) நாமும் போர்க் குற்றவாளி என்று இந்த மாமன்றத்தில் ஒருமனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம்.

முற்பகல் 11–40

அந்தப் போர்க் குற்றவாளியினுடைய இளவல், அவர் அதிபர் அல்ல, ஓர் இளவல். நம்முடைய இந்த மாமன்றத்திலே கொலை செய்யப்பட்ட நம்முடைய தொப்புள் கொடி உறவுகளுக்காக தமிழகத்திலே இன்றைக்கு நாம் கண்ணீர் விட்டால், கண்ணீர் விடுவது அரசியலா? அவர்களுக்காகக் குரல் தருவது அரசியலா? எங்கேயிருந்து இதில் அரசியல் வருகிறது? இன்றைக்குத் தமிழக மக்களின் ஒட்டுமொத்தக் குரலாக ஒரு தீர்மானத்தை ஒருமனதாக இந்த மாமன்றம் நிறைவேற்றியிருக்கிறது. இந்த மாமன்றத்திற்கு என்று இறையாண்மை இருக்கிறது; மத்திய கூட்டாட்சித் தத்துவத்தின்படி நமக்கு எல்லாவிதமான உரிமைகளும் இருக்கின்றன. இந்த உரிமைகளின் அடிப்படையிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால், அதை இலங்கை அதிபருடைய தம்பி, தனி ஒருவனாய், அங்கே அவர் பொறுப்புள்ள ஒரு அதிபர் அல்ல, தனி மனிதனாய், அமைச்சரவையில் ஓர் உறுப்பினர், அவ்வளவுதான். பாதுகாப்புச் செயலாளர். அவர் ஏகடியப்படுத்தி, ஏளனப்படுத்தி, கொச்சைப்படுத்திப் பேசியிருப்பதை நாம் மிக வன்மையாகக் கண்டிக்க வேண்டும்.

இதிலே மூன்று பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று, இவ்வளவுக்குப் பிறகும், இதுவரையிலே மத்திய அரசு மௌனம் காக்கிறதே, ஏன்? பிரதமரோ, வெளியுறவுத் துறை அமைச்சரோ இதுகுறித்துக் கருத்து சொல்லியிருக்கலாம்; வாய் திறந்து பேசியிருக்கலாம். ஒரு மாநிலத்திலே, மத்திய கூட்டாட்சிக்குட்பட்ட இந்த மாநிலத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு, இறையாண்மைக்குப் பெருமை சேர்ப்பதற்கு, பங்கம் விளைவிக்கிற

2011 ஆகஸ்ட் 11] [முனைவர் செ.கு. தமிழரசன்]
அந்தக் கருத்துக்கு, மத்திய அரசு வாய் திறந்து கருத்து சொல்லியிருக்கலாம். ஆனால், மத்திய அரசு இதுவரையிலே மௌனம் காக்கிறது; இதுவரையிலே ஒரு கருத்தும் கூறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குள்ள கவலையெல்லாம் இதுவரையிலே இலங்கைப் பிரச்சினை குறித்து, தமிழகத்திலேயே மிகத் தெளிவான கருத்தை அரசியல் தீர்வு மட்டுமே வழி, நம்முடைய அரசியல் இறையாண்மைக்குட்பட்டு, அரசியல் சட்டத்திற்குட்பட்டு, தெளிவான கருத்துகளைப் பேசி வருகிற ஓரே தலைவர், துணிவான தலைவர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் சார்பில்லாமல், வேறெந்த உணர்வுகளும் இல்லாமல், வேறெந்த சுயநலமும் இல்லாமல், மிகத் தெளிவாக நம்முடைய அரசியல் சட்டத்திற்கேற்ப நம்முடைய இறையாண்மைக்கேற்ப, அரசியல் தீர்வு மட்டுமே வழி என்று பேசி வருகிற ஓரே அரசியல் தலைவர், ஜனநாயகவாதி, Statesman என்று சொல்லக்கூடிய அளவிற்கு இருப்பவர் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள்தான். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தை, ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்தை, இலங்கையிலே இருந்து கோத்தபய ராஜபக்ஷே இப்படிக் கொச்சைப்படுத்தியிருக்கிறார். என்னுடைய கவலையெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருக்கு உரிய பாதுகாப்புத் தருகிற வகையிலே, பாதுகாப்பைப் பலப்படுத்த மத்திய அரசை நாம் வலியுறுத்த வேண்டும்.

இலங்கையிலே இருந்து அப்படிப்பட்ட ஒரு குரல் எழுகிறதென்றால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரின் பாதுகாப்பிற்கு ஒட்டுமொத்தத் தமிழ் மக்களுடைய வாளாய், கேடயமாய், அரணாய், அவர்களுடைய உரிமைக் குரலாய் இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பாதுகாப்பை அதிகரிப்பதற்கான உரிமையை நாம் மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும். தேவைப்பட்டால் இங்கேயிருந்து அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு டெல்லிக்குச் சென்று, பிரதமரையும், அங்கேயிருக்கிற வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களையும் வலியுறுத்தி, இந்தத் தீர்மானத்தை மத்திய அரசும் நிறைவேற்ற வேண்டும் என்கிற கோரிக்கையை, பொருளாதாரத் தடையை இலங்கையின்பேரில் விதிக்க வேண்டுமென்கிற தீர்மானத்தை, பாராளுமன்றத்திலே நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்த வேண்டும். இங்கேயிருந்து டெல்லிக்குச் சென்றாலும்

அது மிகச் சரியாக இருக்கும். இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று வலிறுத்தி, இந்தத் தீர்மானத்தைக் கொச்சைப்படுத்தியிருக்கிற கோத்தபய ராஜபக்ஷேவினுடைய அந்த இழிவுரையை இந்த மாமன்றம் கண்டிக்க வேண்டுமென்று வலியுறுத்தி, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை உள்நாட்டுப் போரின்போது, மனிதாபிமானமற்ற முறையில் ஈவு இரக்கமின்றி அங்குள்ள இலங்கைத் தமிழர்கள்மீது ராணுவத் தாக்குதல் நடத்தி, அதன் விளைவாக பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இறந்ததை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.*

*முற்பகல் 11–45*

*எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்றவுடன், இனப் படுகொலையை நடத்தியவர்களைப் போர்க் குற்றவாளிகள் என அறிவிக்க இந்திய அரசு ஐக்கிய நாடுகள் சபையை வற்புறுத்த வேண்டுமென்றும், இதுமட்டுமல்லாமல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு மற்றும் முழு சம உரிமை கிடைக்கும் வரை அந்நாட்டின்மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டுமென்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 8–6–2011 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்குக் களங்கம் கற்பிக்கும் வகையில், அதனை விமர்சித்து இலங்கை அரசின் பாதுகாப்புச் செயலாளர் திரு. கோத்தபய ராஜபக்ஷே* 'Headlines Today' *தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்திருப்பது, இலங்கை அரசு தான் செய்த தவற்றை நியாயப்படுத்துவதுபோல் அமைந்துள்ளது.*

*இந்தத் தீர்மானத்தை நான் அரசியல் ஆதாயத்திற்காகக் கொண்டுவந்து நிறைவேற்றியதாக திரு. கோத்தபய ராஜபக்ஷே கூறியிருக்கிறார். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.*

*இந்தோனேஷியாவைச் சேர்ந்த* Marzuki Darusman; *அமெரிக்காவைச் சேர்ந்த* Steven Ratner; *தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த* Yasman Sooka *ஆகியோர் அடங்கிய, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்*

செயலாளரால் அமைக்கப்பட்ட மூன்று நபர் குழு அளித்த அறிக்கையின் அடிப்படையிலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதேயொழிய, அரசியல் ஆதாயத்திற்காக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை என்பதை முதலில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சிங்களர், தமிழர் அல்லது இஸ்லாமியர் என்ற எந்தவிதப் பாகுபாடும் இன்றி அனைவரும் இலங்கையர் என்ற முறையில்தான் நடத்தப்படுகின்றனர் என்றும், மற்றவர்களைவிட தங்கள் நாட்டுக் குடிமக்கள்மீது தாங்கள் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதாகவும் பேட்டியளித்திருக்கிறார் திரு. கோத்தபய ராஜபக்ஷே. இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. இது 'முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது' போலாகும்.

இலங்கை இராணுவத்திற்கும் எல்.டி.டி.ஈ.-க்கும் இடையேயான போரின் உச்சக்கட்டப் பகுதியான 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 2009 ஆண்டு மே மாதம் வரையிலான காலத்தையும் அப்போது பல்வேறு திசைகளிலிருந்து வந்த துப்பாக்கிச் சூட்டில் சிக்கிக் கொண்ட பெரும்பாலான அப்பாவித் தமிழர்களின் நிலைமையையும் ஆழ்ந்த கவனத்தில் எடுத்துக்கொண்டு ஆய்வு செய்த ஐக்கிய நாடுகள் சபைக் குழு, இலங்கை அரசால் அறிவிக்கப்பட்ட குண்டுமழைக்கு விலக்களிக்கப்பட்ட பகுதிகளின்மீது இலங்கை இராணுவம் குண்டுமழை பொழிந்தது; மருத்துவமனைகள்மீது குண்டுமழை பொழிந்தது; மனிதாபிமானமற்ற முறையில் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்ய மறுத்தது; இலங்கை அரசை விமர்சிப்பவர்கள் மற்றும் ஊடகங்கள் உட்பட போர்ப் பகுதி வெளியே இருப்பவர்கள்மீது மனித உரிமை மீறல்களை நிகழ்த்தியது; என பல மனிதாபிமானமற்ற, பன்னாட்டுப் போர் நெறிமுறைகளை மீறிய செயல்களை இலங்கை இராணுவம் நிகழ்த்தியுள்ளதாகக் கண்டறிந்துள்ளது.

இதுமட்டுமல்லாமல், மிகப் பெரிய ஆயுதங்களைப் பயன்படுத்த மாட்டோம் என்று இலங்கை அரசு அறிவித்த பின்னரும், அப்பாவி இலங்கைத் தமிழர்கள் தங்கியிருந்த பகுதிகளில் குண்டுகளை வீசி, பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இறப்பதற்குக் காரணமாக இலங்கை இராணுவம் இருந்தது என்றும் இந்த வல்லுநர் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

மனிதாபிமான அடிப்படையில் நிவாரணப் பொருட்கள் மக்களைச் சென்றடையாவண்ணம் இலங்கை அரசு தடையை உருவாக்கியதாகவும் ஐ.நா. வல்லுநர் குழு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஊடகங்களால் வெளியிடப்பட்ட கோரமான வீடியோ காட்சிகளிலிருந்து பெரும்பாலானோர் கொடிய முறையில் கொல்லப்பட்டிருப்பதும் தெளிவாகிறது.

அடுத்தபடியாக, இலங்கைக் கடல் பகுதியில் இந்திய மீனவர்கள் மீன் பிடிப்பதைத் தடுக்க வேண்டுமென்று தமிழ்நாடு அரசுக்கு அறிவுரை கூறியிருக்கிறார் திரு. கோத்தபய ராஜபக்ஷே. கச்சத் தீவிற்கு இதுவரை வந்து கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மற்றும் புனிதப் பயணிகள் இதே காரணத்திற்காக வந்து செல்லும்போது, பயண ஆவணங்களையோ அல்லது நுழை விசாவையோ பெற வேண்டும் என இலங்கை கோராது என்று இந்திய–இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதை நாடாளுமன்றத்தில் தெளிவுபடுத்தும் பொருட்டு, இந்திய மீனவர்கள் கச்சத் தீவைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுதந்திரமாக மீன் பிடிக்கலாம் மற்றும் வலைகளை உலர்த்துவதற்கு அந்தத் தீவைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என அப்போதைய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்தார். இந்த ஒப்பந்தத்திற்கு முற்றிலும் முரணான வகையில் நடந்து கொண்டுவிட்டு, தமிழ்நாடு அரசிற்கு அறிவுரை கூறுவது, 'சாத்தான் வேதம் ஓதுவதுபோல்' உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், திரு. கோத்தபய ராஜபக்ஷே, வட இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதுதான் தற்போதைய முக்கியப் பணி என்றும், போர்க் குற்றவாளிகள் என்று தற்போது கூறுவது பயனற்றது என்றும் பேட்டியளித்திருக்கிறார்.

முற்பகல் 11–50

இலங்கையில் நிலவும் உண்மை நிலவரம் என்னவென்றால், போர் முடிந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும், இலங்கைத் தமிழர்கள் பிரச்சனைக்குத் தீர்வு காணவோ, பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது குறித்தோ எந்தவிதமான நடவடிக்கையும் இலங்கை அரசால் எடுக்கப்படவில்லை என்பதுதான். இவருடைய இந்தப் பேட்டியிலிருந்தே, இலங்கை இராணுவம் போர்க் குற்றம் புரிந்திருக்கிறது; இலங்கை அரசு போர்க் குற்றம் புரிந்திருக்கிறது என்று மறைமுகமாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. உண்மையிலேயே

இலங்கை இராணுவம் போர்க் குற்றம் செய்யவில்லையென்றால், இது தொடர்பான சர்வதேச விசாரணைக்குத் தயார் என இலங்கை அரசு அறிவித்திருக்கவேண்டும். ஆனால், அதைச் செய்யாமல் தேவையற்ற பேட்டிகளை அளித்து வருவது, செய்த தவறை மூடிமறைக்கும் பணியில் இலங்கை அரசு ஈடுபட்டு வருகிறதோ என்ற சந்தேகத்தை சர்வதேச நாடுகள் மத்தியில் தற்போது ஏற்படுத்தியுள்ளது.

அனைத்துக் கட்சிக் கூட்டம், சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டம், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம், மனிதச் சங்கிலிப் போராட்டம், பிரதமருக்குத் தந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமா என்ற அறிவிப்பு, இராஜினாமா கடிதங்களைத் தானே பெற்றுக் கொண்டது, இறுதி எச்சரிக்கை என்ற அறிவிப்பு, என பல்வேறு வகையான கண்துடைப்பு நாடகங்களை முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி நடத்தியபோது, (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு வகையான கண்துடைப்பு நாடகங்களை முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி நடத்தியபோது (மேசையைத் தட்டும் ஒலி) வாய் திறக்காத திரு. கோத்தபய ராஜபக்ஷே நான் கொண்டு வந்த தீர்மானத்தை விமர்சிக்கிறார் என்றால், அந்த அளவிற்கு இந்தத் தீர்மானத்தின் தாக்கம் இருந்திருக்கிறது என்பதைச் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் புரிந்துகொண்டு இருப்பீர்கள் என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இலங்கைத் தமிழ்ச் சகோதர, சகோதரிகளின் நெஞ்சைப் பிளக்கும் துயரங்களை அறிந்த சர்வதேச நாடுகள், போர்க் குற்றத்திற்கு, இனப் படுகொலைக்குக் காரணமானவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கருதுகின்ற சூழ்நிலையில், "போர்க் குற்றங்கள் நிகழ்த்தியவர்களைப் போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் எனவும், தற்போது இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரும் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பி சிங்களர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழ வகைசெய்யும் வரையில், அனைத்து குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும் வரையில், மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின்மீது பொருளாதாரத் தடையை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை இந்திய அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம்" அரசியல் ஆதாயத்திற்கு அப்பாற்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்மீது மத்திய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காததுதான், இதுபோன்றதொரு பேட்டியை அளிப்பதற்கான துணிச்சலை திரு. கோத்தபய ராஜபக்ஷேவுக்கு அளித்து இருக்கிறது என்ற ஐயம் நடுநிலையாளர்களுக்கு, தமிழ் உணர்வாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படும் வரை, இலங்கைத் தமிழர்கள் தங்கள் சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்தப்படும் வரை, சிங்களர்களுக்கு இணையான அந்தஸ்து அவர்களுக்குக் கிடைக்கும் வரை, எனது தலைமையிலான அரசு ஓயாது என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களின் இந்த நியாயமான உரிமைகளை வென்றெடுக்கத் தேவையான ராஜதந்திர நடவடிக்கைகளை எனது அரசு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு உள்நோக்கம் கற்பிக்கும் வகையில் பேட்டி அளித்துள்ள இலங்கை அரசின் பாதுகாப்புச் செயலாளர், திரு. கோத்தபய ராஜபக்ஷேவுக்கு இந்தியத் தூதர்மூலம் தனது கண்டனத்தை மத்திய அரசு தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

## 4. விதி 110—ன்கீழ் அறிக்கை

### காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள நீர்வள அமைப்புகளை வலுப்படுத்தி, நீர் வழங்கு கால்வாய்களைப் புனரமைத்து நவீனப்படுத்துதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பெரும்பாலான மக்கள் வேளாண்மைத் தொழிலையே நம்பியிருப்பதால், வேளாண் பெருமக்கள் வாழ்வில் வளம்பெறவும், அவர்களின் வாழ்வாதாரம் செழிக்கவும், வேளாண் உற்பத்தித் திறனையும், வேளாண் பெருமக்களின் வருமானத்தையும் அதிகப்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.